# *12.* குகப்பரமம்.

### *எழுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம். **

**வா**ர்சா லுகத்திலெனை மனுவாய் வகுத்தவருண் மதியா யிருக்கு நலருள்
சீர்சால வுற்றகரு வியெலா மசைக்குமருள் சிவநாட வைத்த மெயருள்
ஊர்பேர் குணத்திரய மணவாத சுத்தவரு ளொளியாக நிற்கு மொரருள்
பார்மீ தெனக்கருளு மருளாகு மித்தகைய பதியே குகப்ப ரமமே. 1

**அ**டியார் தமக்குறுக ணணுகா தளிக்குமிறை யடரூழ் வினைத்தொ டர்பினால்
மடியார் வெறுப்புறினு மினிதா யருத்துமிறை மறலூ ரிருத்து மறமே
குடியா யிழைத்திடினு நமனாணை பெற்றவர்கள் கொடுபோக விட்ட மிலிறை
படிமீ தெவர்க்குமிறை யெனவே யிருக்குமொரு பதியே குகப்ப ரமமே. 2

**தே**வாதி கட்கரிய முதலா யரக்கர்நரர் செறிபூதர் மற்று முயிர்தாங்
காவா வெனச்சொலவ தரமா தரிக்கவுள கருணா கரக்க டவுளாய்
மூவாசை செற்றபொறை யுடையா ருளத்திலவிர் முழுமா மணிச்சு டரதாய்ப்
பாவால் வழுத்துமென தறிவா யிருக்குமொரு பதியே குகப்ப ரமமே. 3

---

* இவ் விருத்தவடிகளின் ஈற்றுச்சீர்களுள் யாதானுமொன்று தேமாங்கனி யென்னும் வாய் பாட்டிலே “யாளத்தனே” என வருவதுபோல வருதலுங் கூடும். அங்ஙனமாயின், இரண்டு மாஞ்சீர்களாகப் பிரிக்கக்கூடாமை நோக்கி அவ்வடி, அறுசீர்க்கழிநெடிலடி யெனவே கொள்ளப்படும்; திருவலங்கற்றிரட்டின் இரண்டாங்கண்டத்து ஆசிரியவியல் கருதுக.

2. **மடி** = நோய். **மறலூர்** = யமனுலகு.

**நி**லனாள் பவர்க்குமதி மிடியோர் தமக்குமணி நிறைபாவ லர்க்கு மடமே
சொலுமூட ருக்குமுயர் குலமேதை யர்க்குமதி சுழல்பூரி யர்க்கும் விடலே
கலனா யுளர்க்குமற நலனே யுளர்க்குமலல் கடிவா னினைத்த வுடனாம்
பலனீ யருட்சலதி யெனநா னினைக்கவுள பதியே குகப்ப ரமமே. 4

**பெ**ருவா னருட்குயினை நினைவேனை மத்தர்மருள் பிணிகோ ளரக்கர் நிலைநாள்
மிருகாதி பக்கிநகர் வனவேது மச்சவஞர் மிடலோ டிழைப்பி னஙனம்
வெருவே லெனக்குரியை வெருவே லெனக்கருணை விளைவால் விலக்கி யருளும்
பரிவே சிறக்குநிறை பெரியோ னெனச்சொலொரு பதியே குகப்ப ரமமே. 5

**அ**ணிநாய கந்துரிய மணிநாய கங்குசல ரவைநாய கங்கு றைவறு
திணிநாய கங்கவிஞர் புகழ்நாய கம்பெரிய திருநாய கங்க ருடெறு
துணிநாய கம்பரம குருநாய கம்பிரம சுபநாய கந்த மியனேன்
பணிநாய கம்பிரம மெனவே விளங்குமொரு பதியே குகப்ப ரமமே. 6

**இ**கழ்பாவ மென்றவினை யதனால் விலங்ககம மெனவே தயங்கு யிர்களும்
புகழ்சீல மென்றவினை யதனா லுயர்ந்துளவி புதரா யிலங்கு யிர்களுந்
தொகையா மிரண்டும்விர வியகூவின் மைந்தருமொர் சுகமேவ வென்றி ருநடம்
பகமா யிடுங்கடவு ளெனநா னினைந்துதொழு பதியே குகப்ப ரமமே. 7

**எ**ழிலா யியங்கும்விழி யிமைபோ லனந்தநசை யினர்தா மிருந்தி டினுமவ்
விழியாத வன்கிரண மிலதேல் விளங்குவதெவ் விதமாக லின்ப லுயிராய்
மொழிசேத னங்களுழி யொளியா யியங்கமுதன் முதவீர மங்கி னலனில்
பழியே பிறங்குமென நினைவா ரிறைஞ்செனொரு பதியே குகப்ப ரமமே. 8

---

4. **விடல்** = விடப்படுங் குற்றம், **கலன்** = அணிகலன்.

5. **மிடல்** = வலி; **பி - நிகண்டு.**

7. **அகமம்** = விருக்கம் = மரம்; அமரஸிம்ஹ மெனும் **வடமொழி நிகண்டும், பி - நிகண்டுங்** காண்க.

'பாகம்' பகம் என வெதுகைநோக்கி விகாரப்பட்டது.

இத்திருப்பாட்டின் பொருள் - **தகராலயரகசியத்தின்** முதலாங் காண்டத்து 13, இரண்டாங் காண்டத்துப் 11 - ஆக வரூ உந் திருத் தூக்குக்களினுரை களில் இனிது விளங்கக் கிடக்கின்றது.

**க**னிஞேய வன்பரெனு முருகா ரருங்குழவி களெலா நினைந்த வமையம்
இனிதா யருந்துவண முலையா யிறங்குமரு ளெனுமா டனந்த முடைய
தனியீச னந்தநடு வடிபேத மென்பவைக டழுவாத வன்ற னியனேன்
பனியாவு மங்கவருள் புரிதேவ னென்றவொரு பதியே குகப்ப ரமமே. 9

**ந**யமே கிளர்ந்துபர சடியாரை யெந்தநில நகமாதி கண்க ளினுமல்
வெயிலே விரிந்தபக லினுநா கருங்குமரம் வினைசோ ரிருஞ்ச ரையினுந்
தயவோ டகம்புறனு முறையே புரந்தருள்செய் தகையார் பெருங்க ருணையின்
பயனே விரும்பருண கிரியார் புகழ்ந்தவொரு பதியே குகப்ப ரமமே. 10